**In the Court of the Judicial Magistrate No.II**

**Kovilpatti.**

**DEPOSITION OF WITNESS**

**C.C.68 -2016**

PW1 28.08.2018

Name Marimuthu

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

*நான் எட்டையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன் நான் டெய்லர் வேலை செய்து வருகிறேன் எதிரிகளை எனக்கு தெரியும்.கடந்த 07.01.2016 அன்று மதியம் சுமார் 12 மணியளவில் நான் வீட்டில் இருந்தபொழுது எனது தம்பி மாரியப்பன் எனது வீட்டிற்கு வந்து என்னை தரகுறைவாக பேசி சென்டிரிங் கம்பியை கொண்டு என்னை தாக்கினார்.கம்பியை கொண்டு அடித்ததில் இடது பக்க பின்தலையில் மற்றும் முதுகில் காயம் ஏற்பட்டது கம்பியால் எனது வலது கையிலும் என்னை தாக்கினார்கள் எனது பின்னதலையில் காயம் ஏற்பட்டதற்கு தையல் போட்டார்கள் காயம்பட்டதால் என்னை 108 மூலம் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு என்னை அழைத்து சென்றார்கள்.அங்கு சிகிச்சைக்காக 1 மாதம் உள்நோயாளியாக இருந்தேன் மேல் சிகிச்சைக்காக எம் ஆர் ஏ ஸ்கேன் எடுக்க திருநெல்வேலிஅரசு மருத்துவமனைக்-கு அனுப்பி வைத்தார்கள் நான் சிகிச்சையில் இருக்கும் போது போலிசார் வந்து புகார்*

வாக்குமூலம் பதிவு செய்தார்கள் அதில் நான் கையெழுத்து செய்தேன் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கையெழுத்து செய்ததுதான் அது அ.சா.ஆ.1

குறுக்கு விசாரணை இல்லை

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து
காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று
ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து
செய்தார்.

(ஒம்) அ.தாவூத் அம்மாள்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.

**In the Court of the Judicial Magistrate No.II**

**Kovilpatti.**

**DEPOSITION OF WITNESS**

**C.C.68 -2016**

PW2 28.08.2018

Name Kanagalakshmi

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

*நான் எட்டையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன் அ.சா.1 எனது கணவர் ஆவார் எதிரிகள் 1வது எதிரி எனது கொழுந்தன் 2வது எதிரி எனது மாமியார் கடந்த 07.01.2016 அன்று எனது கணவர் டெய்லர் தொழில் செய்வதால் துணிகளை தைத்து கொடுப்பதற்கு எனது வீட்டில் வைத்து பேசி கொண்டிருந்தார் அப்போது 1வது எதிரி கம்பியை கொண்டு அடிக்க வந்தார் நான் தடுப்பதற்காக நான் நின்று கொண்டு இருந்தேன் 1வது எதிரி எனது கணவரை கம்பியால் தாக்கினார் எனது கணவருக்கு தலை மற்றும் விழாவில் அடித்ததால் காயம் ஏற்பட்டது அதன் பின்பு சிகிச்சைக்கு 108 மூலம் தூத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் அங்கு சிகிச்சையின்போது எட்டையாபுரம் போலிசார் வந்து புகார் வாக்குமூலம் கொடுத்தார் அதில் நான் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன் சுமார் 1 மாதத்திற்கு மேலாக எனது கணவர் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்*

*குறுக்கு விசாரணை இல்லை*

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்ட தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

*(ஒம்) அ.தாவூத் அம்மாள்,*
*நீதித்துறை நடுவர் எண்.2,*
*கோவில்பட்டி.*